தமிழ் வாழ்க.

தமிழ்ப் பொழில்

துணர் ௪௬

பரிதாபி ஆண்டு

1972 — 73

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர்:

செ. தனக்கோடி, பி. ஏ.

உள்ளுறை.

பரிதாபி ஆண்டு துணர் சசு மலர் க-மஉ

1972–73

		பக்கம்
1	புத்தாண்டே! வருக! வருக! புலவர். ச. பாலசுந்தரம்	1
2	திருக்குறட் கருவூலம் நக்கீரன் வழியடிமை வித்துவான் பி. மா. சோமசுந்தர முதலியார்	3, 185, 218
3	வேற்றுமை உரைகளின் வேற்றுமை ,,	84
4	கேட்போர் என்பதன் மெய்யுரை ,,	286, 291
5	மொழி மாற்றங்கள் டாக்டர் மா. சு. திருமலை, எம். ஏ., டி. பில்., டாக்டர். கி. கருணாகரன், எம். ஏ., பிஎச். டி.,	17
6	இலக்கியத்தில் கொள்கை முழக்கம் புலவர். தி. நா அறிவுஒளி	25
7	உலகநீதி-திறனாய்வு ,,	35
8	இராமலிங்க அடிகளாரின் இசைப்பாடல்கள் புலவர். தி. நா. அறிவுஒளி	121, 131
9	பொழிலன்பர்கள் சுவைக்க	46, 206, 285, 320, 354
10	நான் ஞாயிறு வித்துவான். அ. வைத்திலிங்கம்	47
11	தமிழ் அன்னை வாழ்த்து ,,	322

12 கோத்த மொழியில் ழகரம் — 52
கோ சுப்பையா, எம் ஏ.,

13 ஏரலெழுத்து — 57
ப. இராமன், எம் ஏ.,

14 கம்பனில் நாணம் — 61, 80
லிருத்சாய்

15 இலக்கியத் திறனாய்வு — 67
டாக்டர். சோ. ந. கந்தசாமி, எம் ஏ., எம். லிட்.,
பிஎச். டி.,

16 சம்பந்தரும் பௌத்தமும் — 223, 227
,,

17 சந்து - பொந்து - கந்து — 96
கோ. தியாகராசன்

18 வாழ்விக்கும் காவியம் — 97, 150, 173
K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

19 கம்பரின் வீரச்சுவை .. — 207, 271, 311, 345

20 பாண்டியன் பரிசில் சொல்லாட்சி — 107
கு பூங்காவனம், க. இ.

21 மகளிர் விளையாட்டுக்கள் — 116
பேராசிரியர். வ. பெருமாள், எம். ஏ., பி. டி.,
எம். ஆர்., ஏ. எசு,

22 பழமொழியின் பொருளும் வேறுபெயர்களும் — 165
,,

23 திருக்குறளில் உவமைச் சிறப்பு — 248
,,

24 பழமொழிச் செல்வம் — 323
,,

25 கையறவு — 126

26 சுதந்தர வெள்ளிவிழா — 129

27 சொல்லிசை யளபெடை 142, 256, 259
அ. தட்சிணாமூர்த்தி, பி. ஏ (ஆனர்சு) பி. எட்.,

28 மதிப்புரை – தமிழ் நூல் 160

29 கப்பலோட்டிய தமிழன் 163

30 வியங்கோள் வினைமுற்று 195
டாக்டர் மோ. இசரயேல்

31 உளப்பாட்டுத் தன்மைப் பன்மை 262

32 தமிழ் எழுத்தும் தேவநாகரி எழுத்தும் 282
புலவர். பி விருத்தாசலம். எம். ஏ.,

33 சேலத்தில் ஓர் காவிரிப்பூம்பட்டினம் 307
அ. இராசேந்திரன்

34 நரபலிச் சிற்பங்கள் 357

35 சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் 321

36 சேலநாட்டு – காவேரிப்பூர்பட்டணம் 337
பேராசிரியர் சி கோவிந்தராசனர்

37 பதிப்பாசிரியர் வ உ. சி. 349
புலவர். க. சுப்பிரமணியன், பி. ஏ,

38 சங்கச் செய்திகள்

39 நோக்கும் நோக்கமும் 361
கிரேசு அலெக்சாந்தர்

40 காதலும் கருத்தும் 371
டாக்டர் சொ. சிங்காரவேலன்

41 உயிர் மெய் ஒலிகளுக்கு உருவம் வேண்டுமா ? 376
கொண்டல். சு. மகாதேவன். பி. எசி., எம். ஏ..

மணிவிழா 33, 65, 127, 355

கலைமகள் விழா 226

புலவர் கல்லூரி ஆண்டு விழா 382

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயமந	மலர்
சசு	பரிதாபி, சித்திரை	க
	(1972 — ஏப்ரல் — மே)	

புத்தாண்டே! வருக! வாழ்க!

1 செங்கதிர் மேழவீட்டில் சித்திரைச் செல்வி யோடு
மங்கைநீ வருகென் றுள்ளம் மகிழ்ச்சியால் அழைப்பச் சீர்சால்
இங்கிதத் தென்றல் வீச, இரேவதி நாளாம் நங்கை
பொங்குறு களிப்பால் போற்றப் புகுதரும் புத்தாண்டே! வா!

2 மன்பதை உரிமையோடு வாழ்ந்திட அறத்தா றேகி
இன்புறு கொள்கை தாங்கும் இந்தியத் தாய்க்குவெற்றி
முன்புற அளித்து வங்க நாட்டினை முளைக்கச் செய்த
தென்புகழ் சேர்விரோதி கிருதெனும் செல்விக்குப் பின்

3 பரிவொடு வருகை நல்கும் பரிதாபி எனும் சீர் அன்னாய்!
வருகநீ! வளங்கள் யாவும் வாய்த்திடச் செய்க! இன்பம்
புரிகெனப் போற்றுகின் றேம், பொலிக! நெல் விளைக! வெற்றி
தருக! நீ டுயிர்கள் வாழ்வு தழைக்க! நல் லமைதி கூர்க!

4 புவிமகள் மேனி நோகும் போர்ப்பிணி ஒழிக! கொள்கைத்
தவறுகள் நீங்கி மக்கள் சால்புயர்ந்திடுக! வஞ்சப்
பவவினை, பதவி வேட்கை, படைக்கல விளைவு மாறி
நவமுறு தொழில்கள் ஓங்க நலமுற வருக! வாழ்க!

5 செந்தளிர் விரித்துத் தேமாந் தீங்கனி வழங்க, முல்லை
கொந்துசேர் முகமலர்ந்து கூப்பிடப் பனியை வென்று
முந்துறு வேனில் வேந்து முகமன் செய் தழைக்க, மக்கள்
பைந்தமிழ் பாடி வாழ்த்த வரும் பரிதாபிப்பாவாய்!

6 எழில்மிகு தமிழ்ப்பண் பாடும் ஈகையும் வளர்ந்து, நண்பால்
பொழில் வளம் சிறந்து, நாட்டுட் பூசலும் பொய்யும் தேய்ந்து,
தொழில் நலமுற்றுத், தூக்கம் மடியொடுதொலைந்து, நல்லோர்
மொழிவலம் சூழ்ந்து மல்க; முன்னுக தமிழ்ப்புத் தாண்டே!

7 ஊக்கமும் உழைப்பும் உண்மைஒழுக்கமும் வளர்க! செல்வ
வீக்கமும் வேலையில்லா விதனமும் தளர்க! சீர்த்த
நோக்கமும் உரிமை வாழ்வின் நுகர்ச்சியும், விளைபொருள்கூர்
ஆக்கமும் அறமும் ஓங்க அருள்க! புத்தாண்டே வாழ்க!

8 தணிவிலாத் தொண்டால் வாழும் தமிழவேள் நினைவுச் சின்னம்
அணிபெற அமைத்துச், சங்க அரும்பணி விளக்க மாக
மணிவிழாப் புரிய எண்ணி மகிழ்வொடு முயலும் எங்கள்
பணியெலாம் சிறக்கப் போந்த பரிதாபி ஆண்டேவாழ்க!

9 சொன்மலர் மாலை சூட்டித் தூயநல் லன்பாற் போற்றி
பன்முறை வணங்கி வாழ்த்தி வருகென அழைக்கின்றோம் பல்
நன்மைகள் புரிவாய்! நாடு நலம்பெற அருள்வாய்! எங்கள்
தென்மொழி துறைகள் தோறும் செழித்திடச் செய்வாய் வாழி

ச. பாலசுந்தரம்

(முற்றொடர்ச்சி துணர் சுடு மலர் எ)

திருக்குறட் கருவூலம்

(கற்றதனாலாய பயன்)

நக்கீரன் வழியடிமை. வித்துவான் பி. மா. சோமசுந்தர முதலியார்.
இராணிப்பேட்டை.

குo. கற்றதனாலாய பயன்

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்."

என்பது குறள். இக்குறட்பாவுக்குப் பரிமேலழகர் வகுத்துள்ள உரையாமாறு.—

"எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு அக்கல்வியறிவானாகிய பயன் யாது; மெய்யுணர்வினையுடையானது நல்ல தாள்களைத் தொழாராயின் என்றவாறு.

"எவன் என்னும் வினாப்பெயர் என்னென்றாய் ஈண்டு இன்மை குறித்து நின்றது. கொல் என்பது அசை நிலை. பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் "நற்றாள்" என்றார். ஆகம வறிவிற்குப் பயன் அவன் தாளைத் தொழுது பிறவியறுத்தல் என்பது இதனாற் கூறப் பட்டது"

இக்குறளுக்குப் பரிமேலழகரை யொப்பவே பரிதியாருங் காலிங்கரும் உரை செய்துளர். மணக்குடவர் இக்குறளுக்குக் கண்ட பொருள் சிறிது வலிந்து கொண்டதே யாம். அவருரை வருமாறு :

"மேற்கூறிய எழுத்தினானாகிய சொற்களெல்லாங் கற்றதனாகிய பயன் யாது; விளங்கின அறிவினையுடையவன் திருவடியைத் தொழாராயின் என்றவாறு.

"சொல்லினானே பொருளறியப்படு மாதலான் அதனைக் கற்கவே மெய்யுணர்ந்து வீடு பெறலாகும். மீண்டும் வணக்கங் கூறிய தெற்றுக்கென்றார்க்கு, இஃது. அதனாற் பயனிது வென்பதூஉம், வேறு வேறு பயனில்லை யென் பதூஉம் கூறிற்று.

"கற்பக் கழிமட மஃகும் "என்றாருமுளர்."

உரையாசிரியர் மணக்குடவர் முதற்குறட்பாவுக்கும் இக் குறட்பாவுக்கும் இயையு கற்பிக்கப்புக்கதே உரையை வலிந்து கொண்டதாகக் காட்டி நின்றது ஆகலின் உரையும் சிறப் பினின்றுஞ் சிறிதே ஓரீஇயது. எழுத்தானுவதே சொல்லன்று; ஒலியானுனதே எழுத்தாகி. எழுத்துக்கள் கூடிச் சொல்லாத லானும், அச்சொல்லும் ஒலிவடிவினது, வரி வடிவினது என இருவகைத்தாயிலங்கலானும், அவவிருவகையும் பொருள் பயந்தே நிற்பவாகலானும், கல்வியேயன்றி. ஒலிவடிவின் பய னுங் கேள்வியும் உறுதி பயத்தலை நாயனர் பிறிதோரிடத் துரைத்தாராகலானும். வரிவடிவையே வள்ளுவர்பெருமான் வழுத்தினுரெனின், ஒலி வடிவை உணர்த்தா தொழிந்ததென்னே வெனுங்கடாவிற்குக் காட்டலாவதொரு காரணமின்மையானும், எழுத்தெல்லாம் அகரத்தை முதலாகவுடையவெனும் உண்மை வரிவடிவினும் ஒலிவடிவினேயே பெரிதும் பெறப்படுதலானும், வரிவடிவே யென்று கொண்டக்கால் 'அகர முதல' வென்னும் உவமை பெரிதும் மாட்சிமைப்பட்டுக் காட்டாதாகலானும், இவ்விரு குறள்களுக்கும் இயைபு காட்டிய மணக்குடவர் இவ் வதிகாரத்துள்ள ஏனைய (எலலாக்) குறட்பாக்களுக்கும் இன்ன னம் இயைபு காட்டிற்றிலராகலானும் அஃது உரையன்றென்க.

கக. நூல் பயிலியல்பு

இனி, "எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு" என வரூஉம் பரிமேலழகர்தம் உரையின் மெய்ப்பயனைத் தெளிதல் வேண்டின், நூலின் திறத்தையும் நூல் பயிலியல்பையும் முன்னர்த் தெளி தல் வேண்டும். நூல் பயிலியல்பு பொதுப்பாயிரத்தாற் பெறப் படுமாலோ; ஈண்டுணர்த்தலெற்றுக்கு எனின், அறியாது கடா யினுய். பன்னருஞ் சிறப்பின் நல்லாசிரியரையுணர்ந்து வழி பட்டு நூல் கேட்பான் புக்க நன்மாணுக்கர் உளங்கொளல் வேண்டும் 'நூல் பயிலியல்'பே பொதுப்பாயிரத்தாற் பெறப் படும், ஈண்டுரைக்கப்படுவது அஃதன்றே. ஆகலின் இது வேறு அது வேறு எனத் தெளிக என்பது. ஈண்டுணர்த்தப் படுவது யாதோவெனில், வாய்மைக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர் பெருமான்

"யாதானு நாடாமா லூராமா லென்னெருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்றருளிய மெய்யுரையைக் கடைப் பிடித்தொழுகுவார் உளங்கொளல் வேண்டும் நூல் பயிலியல்பே யென்க. நல்லா

சிரியனை யடுத்த நன் மாணுக்கன் எல்லா நூல்களையும் ஆசிரியன் மாட்டே கற்றுத் தேரவெண்ணின், நூற்பரவையின் பெருமையும், ஆசிரியன் மாணுக்கன் ஆய இருவரது வாழ்நாட் சிறுமையும், மற்றும் பல காரணங்களும், அவ்வெண்ணத்தை முற்றுவிக்கா எனவே எந்நூலையும் ஐயந்திரிபறக்கற்கும் புலமை பெற்று ஆசிரியனை நீங்கிய ஒருவன் "மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு" என்னும் மறைமொழியை மனங்கொண்டு சாந்துணையுங் கற்றல் வேண்டும் என்க.

அங்ஙனங் கற்பான் நூலைப் பற்றிய பின்வரும் அருளுரையினை உணர்தல் இன்றியமையாத தென்க

"ஒலியே எழுத்தாகிறது எழுந்தே சொல்லாகிறது சொற்களே சொற்றொடராகின்றன சொற்றொடர்களே பாட்டாகின்றன. பாட்டுக் கூட்டமே புத்தகமாகிறது. இதனைச் சாத்திரமென மதிப்போன் ஆரம்பம் யாதாயிருந்ததெனக் கவனிப்பவனுமில்லை இத்திற வழக்கப் பேழ்வாய் முதலை அவன் முதலிய உலகரை விழுங்கி விடுகிறது"

"புத்தகங்களுள் முழுப் பொய்யும், பொய் கலந்த மெய்யும், அறியாமையுமிருத்தல் கூடுமாகலின் அனைத்தும் மெய்யெனக் கோடலுங் கூடாது."

நூல்கள் மக்கட்கு மெய்யறிவு கொளுத்தத் தோன்றியனவன்றே; அவற்றுட் பொய்யு மெய்யும் விராயவா றென்னை; வழூச்செறிந்தவா றென்னை; அறியாமை தங்கியவாறென்னையென இவை முதலிய கடாக்களெழுமன்றே. ஆகலின் நூல்களைப் பற்றி நோக்குவாமாக.

கஉ. பொய்யு மெய்யும் விராய நூல்கள்

"எமமொழியி லெவராலெழுதப்பட்ட நூலாயினும், அதனுள் நல்லன காணப்படின் அவற்றைக் கோடலும் அல்லன காணப்படின் அவற்றை நீத்தலும் உயிர்நலன் விரும்புநர் செய்கையாம். யாதானுமொரு நூல் ஆன்றவிந்தடங்கிய சான்றோரருளியதாக் காணப்படினும், அந்நூற்கண் உலகத்தே வழங்கி வரூஉம் எழுத்துக்களும் சொற்களும் ஆளப்பட்டபடி, 'ஒருவர் சென்ற வழியே செல்லல்' (கதானுகத நியாயம்) என்னும் மரபு தழீஇ, உலகின்கண் வழங்கிவருந் தவறுன செய்திகளும், நவீன கற்பனைத் தலபுராணக் கதைகளும் ஆளப்பட்டிருக்கும். இருப்பின் அவற்றை விடுத்து அமைவுடையவற்றைக் கோடலே அறிஞர்க் கழகாம்."

மேற்காட்டிய அருளுரைக்கண், நூலில் தவருன செய்திகளும் ஆளப்பட்டிருக்கும் எனலை நிலைபெறுத்துஞ் சான்று ஒன்றை ஈண்டுத்தருதும் ;—

"நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடா தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்ன நா
ளேடாக மாமேரு வெற்பாக வெங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ"

என்னும் வில்லிபாரதப் பாடலில். விளம்பப்படும் வரலாறு தவறுடைத்தே என்க. என்னை? "புவனியிற் போய்ப்பிறவாமையினும் போக்குகின்றேமவமே" என்று வருந்தும் தேவர் குழுவிற்றங்குந்தவமே சிறிதுடையார் வரலாற்றைத் தம்மரபினரெனும் நசைபுற்று வியாசர் பாடினராக, முழுமுதல்வனை விளங்கும் விநாயகப் பெருமான் அவ்வரலாற்றைப் பொருளெனக் கொண்டு எழுதும் எளியராயினர் என்றியம்பம் பொய்யுரை யாவதேயுமன்றி பொல்லா நரகிலுய்க்கும் பெரும்பழியுரையுமாமாகலின். ஆயின் இவ்வாறு கூறிகோடற்கென்னே கருத்தெனின், தாம் வரைதன்மேய வரலாற்றினை மாண்பு காட்டியுரைப்பான் மொழிந்து கொண்டதாகலாம் என்க. வியாச முனிவரர் தங்கரத்திற் கொண்ட ஏடு மேருமலையனைய மேம்பாடும் எழுத்தாணி மூத்தபிள்ளையார் கரத்திலகும் கோடனைய பெருமையுமுடையதெனப்பிறர்க் குணர்த்துவான் உயர்வு நவிற்சியணியினின் வைத்து மொழிந்தனராக அதனையே தமிழ்ப் பாரதநூலும் உரைப்பதாயிற் றென்னினும் ஆம்.

'ஒருவர் சென்றவழியே ஏனையவரும் ஆராயாது செல்லல்' என்னும் மரபுக்கும் ஒரு சான்று காட்டுதும்.

இராமன் காடுபுக்குறைந்தபோழ் தொருஞான்று. இந்திரன் மதலையாய சயந்தனென்பான் காகவுருக்கொடு வந்து சீதையின் முலைகளை வள்ளுகிர்;வாளினல் குத்தினனெனவும. அதுகண்ட இராமன் அவன்மேல் ஒரு பகழி தூண்டினனெனவும், அப்பகழி அக்காகத்தின் ஒரு கண்ணைக் கவர்ந்து கொண்டதெனவும், அற்றைநாள் தொட்டு காக்கைகட்குக் கருவிழி ஒன்றேயென அமைந்ததெனவும் இராமாயணங் கூறும். கல்வியிற் பெரிய கம்பரும்.

"எந்தை நின்சர ணஞ்சர ணென்றவி தன்னல்
முந்து நின்குறை யும்பொறை தந்தன முந்துன்

சந்த மொன்றுகொ டிரத்திரள் கண்கட மக்கே
வந்தொர் நன்மணி நிற்கென வைத்ததும் வைப்பாய்''
(சுந்தரகாண்டம் - சூளாமணிப்படலம் - 81 ஆம் பாடல்)

என்றியம்புவாராயினர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும்

'' சித்திரகூ டத்திருப்பச் சிறுகாக்கை முலைதீண்ட
அத்திரமே கொண்டெறிய வனைத்துலகுந் திரிந்தோடி
வித்தகனே யிராமாவோ நின்னபய மென்றழைப்ப
அத்திரமே யதன்கண்ணை யறுத்ததுமோ ரடையாளம்''.

என்றிக்கதையை இசைப்பதாயிற்று. இவை முதலாயின பிடித்தே அகராதிக்காரரும், ஏகாட்சம் ஏகாட்சி யென்னுஞ்சொற் களுக்குக் காகம் எனப் பொருளெழுதி வைத்தார். இக்கூற்றின் உண்மையை ஆய்வான் புக்க, தவப்பெருஞ் செல்வராய பாம்பன் குமரகுருதாச அடிகளார், ஒரு காகத்தைப் பிடித்துப்பார்த்து, ஏனைப் பறவைகட் கிருத்தல் போன்ற ஒரெலும்புத் தடையை நடுவட் கொண்ட இருதொளைகளிலும் இருவிழிகளுமுள வாதலையும், காகம் கண்ணைச் சாய்த்து நோக்குமோரியற்கையுடைத்தாதலை யுங் கண்டறிந்தார். இவ்வடிகளார் உலகவழக்கினும் நூல் வழக்கினும் உணரலாகும் பல செய்திகளையும் ஆய்ந்து உண்மை கண்டு உலகுக்கு உதவியுள்ளாரால். இக்கட்டுரைக்கண்ணும் நூல் பயிலியல்பு தொடங்கி'' ''எனுங் குறியீட்டுள் வருங் கட்டுரைகளும் அவர்தம் அருளுரைகளேயாம். மேல் வருவன வும் இங்ஙனமே யாமென்றுணர்க.

மேற்கூறியவாற்ருல் அறியப் பெறுவதென்னெனின் நூல் பயில்காலை அந்நூலுரைகளைக் காய்தலுவத்தலகற்றி ஆய்ந்து உண்மை தெளிதல் வேண்டும் என்பதேயாம். '' இவர் அருளாளர். இவரது மாற்றம் மேற்கோளில் வழியும் உறுதித்தாகலாமென அஃதொன்றனையே வற்புறுத்தத்துணிதலு மேற்புடைத்தன்று. என்னை ? அவர் தொன்மைய வெழுத் துக்கள், கேள்விகள் என்பன கொண்டுங் கூறியிருத்தல் கூடுமாமகலின் ''.

ஆயின் இராமாயணத்துப் பயிலுங் காக்கை வரலாறு வாய் மைத்தன்றோ யென வினவின் சோறும். அவ்வரலாற்றின் வாய்மை பொய்ம்மை குறித்தாய்தற்கு இஃதிடனன்று. எனவே அக்கதை வாய்மையே என நிலைத்த காலத்தும், சீதையின் கொங் கையைக் கொத்திய காகத்தோடே ஒற்றைக்கண் கதை முடிந்த தாதல் வேண்டும். அதன் குலத்தையே தொடர்ந்ததெனல் சால் பிற்றன்றென வுணர்க.

மற்றெரு உண்மையையும் உயிர் நலம் நாடுவார் உளங் கொளல்வேண்டும். "உலகில் உழவரும், வணிகரும், அரசு பணியாளரும், கைத்தொழிலாளரும், கூலி வேலை யயர்நரும் இருத்தலே ஒப்பக் கல்வித்தொழிற் பூண்டவரெனப்படும் புலவரு முளர். அப்பயிரிடுவோர் முதலாயினருட் பொய்யரும் மெய்யரு மிருத்தலைமான, கல்வித்தொழில் புரிநருள்ளும் பொய்யரும் மெய் யருமிருப்பரென்பது மெய்ம்மையே யாகும் ஆகலின் அவர் நூல்களுள் தந்நலங் கருதிய பொய்யுங் காணப்படல் புதுமை யன்றே. இத்திறத்தோர் முன்னுளே யிருந்தார்; இந்நாளே யிரார்; இனியும் வாராரெனற்கோர் இயைபின்மையின் இக் காலத்தும் வருங்காலத்துங் காணப்படுவோரேயாவரென அறிக· அறிந்து உண்மையுணர்ந்து புத்தகத் திரிபுகளைக்கண்டு மயங் காதிருத்தல் வேண்டும்".

கரு. நறு நூல்களில் உளவாம் இடைச்செருகல்கள்

தெய்வத் திருவருளெய்தினரும், தெய்வப்புலமை யுற்றுரும் வையக மாந்தர் பாலுற்ற இரக்கத்தானும், பிறகாரணங்களா னும், அருளிச்செய்த நூல்களில் பற்பலபொருந்தாக் கூற்றுக்கள் பின்வந்தோரால் நுழைக்கப்பட்டுள. அச்சுப்புத்தகம் போலாது பனையோட்டில் வரையப்பட்ட நூல்களாகலின் இடைச்செருகல் களுக்கு எளிதில் இடங்கொடுப்பவாயின. திருமந்திரம் மூவாயி ரம் என்ற எண்ணுக்கும் மேற்பட்டுக் காட்சிதரலும் பெரியபுராண மும் அவ்வண்ணமே மிகைப்பாடல்களோடு மிளிர்தலும் தேவா ரத்திலும் வெள்ளிப் பாட்டுளவாதலும் உன்னற்பாலவென்க.

"கந்தரனுபூதி ஆடும் பரிவே லணிசே வலென" எனத் தொடங்கும் பாடலை முதலாகக்கொண்டு "தூசாமணியும்" எனத்தொடங்கும் பாடலை இறுதியாகக் கொண்டது. புஷ்பரதச் செட்டியார் முதன் முதலச்சிட்ட கந்தரனுபூதிப் பதிப்பிலும் "பேசாவனுபூதி பிறந்ததுவே" எனமுடியும் பாடலே இறுதிப் பாடலாகவுள்ளது. அக்கரங்கள் ஐம்பத்தொன்றுதல் நோக்கிப் போலும் எட்டுப் பாடல்கள் புனைந்து சேர்க்கப்பட்டன". இந் நூலே சில பதிப்புக்களில் நூறு பாடல் கொண்டிலங்குவதும் வியப்புக்குரியதே. இன்னணமே கந்தரலங்காரமும் சில மிகைப் பாடல்களைக் கொண்டுள்ளது.

விலைக்கு விற்கும் பொருட்டுத் தாயுமானவ சுவாமிகள் பாடலை அச்சிட்ட ஒருவர் அச்சுவாமிகள் வரலாற்றுச் சுருக்க மொன்று வரைந்து கொண்டு அதனுழை, இராமநாதபுரத்தில்

அவரது திருமேனி சமாதி செய்யபபட்டுள்ளதென்பதை மறைத்து, அவர் ஆகாயத்திற் சோதியாய்ச்சென்று மறைந்து விட்டனர் என்றெழுதியிருத்தலைக் கண்ணுற்ற தவத்திரு. பாம்பன் அடிகளார், அங்ஙன மெழுதினாரைக்கண்டு, அன்ன ணம் வரைதற்கு ஆதரவு என்னையென வினவலும், அவ்வரலா றெழுதினர் அப்படித்தான் இருக்கவேண்டும் என்று அறைந் தனராம்.

இவ்வண்ணம் அறியாமையால் நேர்ந்த பிழைகள் உள. அம்மட்டோ! "வடமொழி கல்லாத்தமிழ்ப் புலவர்கள் தம்புல மைக்கு வேண்டப்படும் வடமொழி நூல்களின் வரலாறுகளும் நுதலிய பொருள்களும் எத்திறத்தன என்பவற்றுள் ஒன்றும் உள்ளபடி யறியாமே பலர் பலவாறு பகர்வன கேட்டும், பொறித் தன கண்டும் வரைந்த வழுக்களும்" பலவாயுள்ளன.

மேற்குறித்த இடைச்செருகல்கள் போன்ற வடமொழியினும் தந்நலங்கருதி நுழைக்கப்பட்டவையுள. ஒரு சான்று ஈண்டுக் காட்டுதும்

சைவசமயம் வேதம், ஆகமம் என்னும் இரண்டையும் போற்றும். "வேதமொடாகம மெய்யா மிறைவனூல், ஓதுஞ் சிறப்பும் பொதுவுமென்றுள்ளன" என்பது திருமந்திரம். இவ் வாறு 'சிறப்பு' என்று கொண்டாடப்படும் ஆகமங்கள் நடுவி கந்த உரைகள் பலவற்றைத் தன்னகத்தே பொதிந்து வைத்துக் கொண்டு கற்பாரை உண்மையுணர வொட்டாது தடை விளைப் பனவாயுள. என்னை? காமிகாக பூர்வபாகம், திருநீறணிதல், இல்லெடுத்தல், முதலாய வினைகளில் வருணந்தோறும் வேற் றுமை கற்பித்து, குறிப்பிட்ட ஒரு கூட்டத்தாரையே உயர்த்து வதாயுள்ளது. இது குறித்துப் பாம்பன் அடிகளார்,

"கல்வி, அறிவு, திரு, ஒழுக்கங்களோடு கூடினவரும், அவை கூடாதாருமாகிய பலரும் வைகியுள்ள இப்புடவியின் கண் ஒரு கூட்டத்தாரையே ஒருசிலரையே பெரிது முயர்த்தலும், அவரைப் போல ஏனையோர் இனிதுவாழொண்ணு தென்றலுமாம் அதரு மங்கொண்டு படலம் படலமாக அவ்வொரு சிலர் பிழைப்புக்கு வழி வகுத்தலோடு பலகருமங்களையும் விதிக்க வந்த புத்தகமே அவ்வாகம பூர்வபாகமெனவும், சிமார்த்தர் பெரிதுந் தந்நலங் கருதி யெழுயுதிள்ள மிருதிகளை யொத்த இப்பாக படலமியாவை யும் அவற்றிலுள்ள செய்திகளனைத்தையுஞ் சிவபெருமான் கூறியருளினனென்பது அருளவா மெல்லாரும் இனிதுய்திபெற

வேண்டுமெனுந் திருவுளப் பெருங்கருணைத்தடங்கடலாய்த் தரும தேவதை மீதெழுதரு தலைமைப் பொருளாய் வயங்கும் அவனது கடவுட்டிறத்தை யிழுக்கத்துட் படுத்துவதா மாகலின அது சால பிற்றன்றெனவும் நடுவுநிலை யோம்புநர் பலரும் நவில்கின்றனர். நடுவுநிலை யோம்பல் எமக்குங் கடன்மையே. போந்தநியதிகளை யெவரெவரெவ்வாறு கொள்ளினுங் கொள்ளட்டும் இவை ஈசன் கட்டளை யென்று கூறற்கே யெமது நெஞ்சம் பெரிது மஞ்சுகின்றது. போந்த தந்த்ராவதாரப் படலத்தில் "இல்லறத்து ஆதிசைவரே எல்லாக் காரியங்களிலும் அதிகாரமுடையவர்" என்றதூஉம் பேராசங்கைக் கிடனுயிருத்தலுய்த்துணரத் தக்கதாம்"

என்றருளிச் செய்துள்ளதூஉம் பொச்சாவாது கடைப்பிடிக்க.

கச. திருக்குறள் உரைகளிற் சில

மேற்போந்தவாற்ருன், ஒரு நூலை, இறைவனருளிய தென்னுங் கூற்றுக்கொடு ஆய்ந்துணராது போற்றலும், இன்று தோன்றிய நூலென்னும் நினைவுகொடு, தூற்றலுந்தூயார் செய்யாரென்றுணர்க அன்றியும், ஒருவர் முன்னுக்குப்பின் முரண்பட மொழிந்தார் என்றும் நவை கூறற்க என்னை? "காலையிலிருந்த யாதானுமோருடம்பாடு மாலையில் மாறுபடலுங்கூடும் ஒரு நிமிடத்தினே மாறினும் மாறும். அஃதுண்மையுணர்ந்த வழித்தாயினுமா மாகலின், ஒருவர் முன்மொழிந்த முடிவுக்குப் பின்மொழிந்த முடிவு திண்ணியதாகவே கொள்ளப்படு" மாகலின்

ஆராய்ச்சியில் எந்நூலும் முற்றுங் குற்றமென லேற்படாது. அஃதொப்பவே எந்நூலுங் குற்றமே புகாததெனலுஞ் சால்பிற்றன்று. ஆகலின் நீரொழியப் பாலுண் குருகொப்பக் குற்றமொழியக் குணங்கோடலே செய்யற் பாலதாகும்.

மணக்குடவர் முதற்குறளுக்கு உரைத்த உரை ஏற்றுக் கோடற் பாற்றே இரண்டாங் குறளுரை பற்றி மேலே யிசைத்தாம். உயிரெழுத்துக்கள் பன்னிரண்டுக்கும் அகரம் முதலெழுத்தென்று கொண்டபரிதியார், மெய்யெழுத்துக்களுக்கும் அது முதலாவதைக் கூருது விடுத்தகாரணம் விளங்கிற்றில்லை. காலிங்கர் உரை செய்யுள் நடைத்தாயினும். முதற்குறளுரை அத்துணைத்திட்பமுற்றுத் திகழ்வதென்று கொள்ள வியலவில்லை

இனி முதன்மையான குணத்தையே ஆதிபகவன் என ஆண்பாலாகக் கூறினுரெனவும் குணத்தை உயர்திணை யாண்பாலாக் கொண்டதற்கேற்ப நற்ருள் என்றுரெனவும் வரையப்பட்ட உரை

திருவள்ளுவர் திருவுள்ளத்தைத் தெளிப்பதாயமையாது உரையாசிரியர் உள்ளத்தை உணர்த்துவதாயமைந்துள்ளது. மாருப் புகழ்கொண்ட வள்ளுவருள்ளத்துக்கு மாரும் உரையாக்குதல் மாட்சிமைப்படுவதாகாது என்பது அடியவன் கருத்து. அன்றியும், வள்ளுவர் செய்த திருக்குறள் என்னும் பைங்கூழில் விளைந்த கதிர்மணிகளை உரையாசிரியர் தமது கொள்கைத் திரையால் மறைக்கின்ருரோ என்னும் ஐயங் கற்பவர்க்குத் தோன்றும் வண்ணம் எழுதல் அறமுமன்று முறையுமன்று. ஒரு தனிச்செந்தமிழ் நூலியற்றி, இவரொத்தார் தங்கருத்துக்களை உணர்த்தலே அறவழி நின்ருற்றுஞ் செயலாகும் என்க

'அன்புநெறியே தமிழர் நெறி' என்ற நூலின் ஆசிரியர் ஆதிபகவன் என்ற தொடர்க்குத்தரும் விளக்கம் யாவருமுணரற் பாலதாகும். அதன்கண் அவ்வாசிரியர், அருவிலிருந்து உருவாக ஆபவன் என்பதால் இறைவனை ஆதியென்றும் அவ்விறைவனே பலவாகப் பகுபடுபவன் ஆதலின் பகவன் என்றும், இவ்வணம் ஆதியும் பகவனுமான இறைவனிடத்திலிருந்து உலகங்கள் தோன்றுவன என்றுங் கூறியுள்ளது ஆய்வுக்குரித்தே.

என்னை? இறைவன் அவ்வாறு பகுபடற்காம் இன்றியமையாமையாது என்னுங் கடாவெழுமால். ஒருவனே பலவாகப் பகுபடுவான் எனல் ஏகான்மவாதத்துக்குத் துணைசெய்வதாயும் நிற்கும். திருவள்ளுவர் இக்கொள்கையர் என்பதற்கோ ராதரமுமின்றே! அன்றியுந் தொன்மை நூலாய திருவாசகம் 'மிண்டிய மாயாவாத மென்னுஞ் சண்ட மாருதஞ் சுழித்தடித்தார்ப்ப' உயிர்கள் அதனெறிச் சென்றுழல்வர் என அக்கொள்கையை இழித்துரைத்து நிற்கிறது. இற்றைஞான்று பல துறவிகள் இக்கொள்கையை ஆர்வத்தேற்றுக் கொளலென்னுவெனில் நுவறும் "யாது செய்யினும் அதனுல் எமக்கொரு தீங்கின்று. செய்வது ஆன்மாவாகிய யாமன்று" என்று கூறிக்கொண்டே உலகத்து நிலவும் உண்பன, நுசுர்வன முதலாய எவ்வின்பத்தையும் இழக்காமல் நுகரலாமே "என்னும் பேராசையாலேயே என்றறிக. ஆனல் வள்ளுவர் பெருமானே அவாவறுத்தலைப் பெரிதும் வற்புறுத்துவரே.

அன்றியும் அன்புநெறியே தமிழர்நெறி' என்ற இந்நூலாசிரியர் வடமொழியில் பகவான் என்ற சொல்லே கடவுளைக் குறிக்குமன்றி, பகவன் என்ற சொல் குறிக்காதெனவும், பகவன் என்ற வடிவுடைய ஒரு சொல் வடமொழியில் இல்லாத ஒரு சொல்லேயாகும் எனவும் உரைத்துள்ளார்.

இவ்வுரை ஏற்றுக்கோடற் பாற்றன்று என்னை? ஸ்ரீருத்ர நமகத்தில் ''நமஸ்தே அஸ்து பகவந் விசவேச்வராய மஹாதேவாய!'' எனவருதலி னென்க. நமஸ்தே அஸ்து பகவ:! பாரசீ நாமுகாக்ருதி! அயம்மே அஸ்து பகவாந்! நமஸ்தே அஸ்து பகவந் விச்வேச் வராய !ஓம்பகவதே ருத்ராய'' என்று சுருதி கற்பச் சூத்திரத்தில் வருதலுமோர்க. ஈண்டு பகவன் என்ற சொல்பயில்வதும் இறை வனைச்சுட்டுவதும் வெள்ளிடை விலங்கல் ஆம்.

கடு. **வாலறிவன்.**

வாலறிவன் என்ற சொற்கு'' மெய்யுணர்வினை யுடையான் என்று பரிமேலழகர் பொருளுரைத்தார். எனவே ஏனையரறிவு மெய்யொடு படாத அறிவு என்ருராயிற்று. மெய்யொடு படாத வாறென்னையோ வெனின் மாந்தர் அறிதோ றறியாமை காண் டன்மையராகலின் மெய்யொடு படாதா மென்க. அன்றியும் மாந் தர் முழுதுணராற்றலுடையரல்ல ராகலின் குறையறிவினரே யாம். இஃதும் ''மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு'' என்ற நாயனுர் அருண்மொழியாலுணரலாமே.

ஆகலின், ஒருவர் எத்துணைக் கற்றவரேயாயினும் அவர்தம் அறிவு நிறையறி வெனப்படாது அறியாமையாகிய குற்றத் தின் நீங்கி வாலறிவு முற்றினரென ஒருவரைக் கிளத்தலும் அடாது. எனவே கற்ற அறிஞரேயென்றுலும் அவர் பாலுத் அறியாமை தங்கியே நிற்குமென்பது தேற்றமே. அது கொண்டே மாதாநுபங்கியாரும் ''அறியகற் றுசற்றுர் கண்ணுந் தெரியுங் கால், இன்மையரிதே வெளிறு'' என்றுணர்த்தியருளினுர் எனக.

மேற்காட்டியவாற்ருல், ஒருவர் சாந்துணையுங்கற்பினும், அவர்பால் அறியாமையுந் தங்கி நிற்கும் என்பதுணர்த்தப் பட்டது அறியாமை தங்கிடும் வரையும் அவர்தம் அறிவு நிறையறி வாகாது குறையறிவே யாம் என்க எனவே வான்மையின்மை பெறப்பட்டதோர்க. குறையறிவாய் நிகழும் வரை அவர்தம் அறிவிற்கோரெல்லை கற்பிக்கப்படும் என்பதுவுந்தேர்க.

இறைவன் திருவடியே பற்றுகப் பற்றி அவன் திருவருளாம் பெருங்கடலில் தோய்ந்து நிற்பவரே நிறையறிவுடையராம். என்னை? வாலறிவனைச் சார்ந்து நிற்றலின். உயிர்தான் சார்ந்த தன் வண்ணமாந் தன்மைத்தாகலின், உயிரும் வாலறிவுடைய

தாயிலகும். இறைவன் திருவடிபற்றிய பேறுடையார்க்கும், கல்வி நலமொன்றே சான்ற பிற அறிஞன் மார்க்கும் வேறுபாடு ணர்த்துவான்புக்க மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர்,

"கற்ருே ரறியா வறிவினர் கற்ருேர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர்"

என்றிசைத் தருளியது ஈண்டு நினைவு கூர்தல் வேண்டும் இதனனே இறைவன் நிலைகளை யெல்லாம் மாந்தர் தஞ்சிற்றறிவு கொடு ஆய்வான் புகுதல் சாலாதென்பதும் பெறப்படுமால். முன்னோர் வரைந்து வைத்தவைகளைக் கண்மூடிப் பின்பற்றுதலுங் கூடாதென்பதுவு மிதனுல் தேர்க. 'சாத்திரங்கள் கடவுளை நிச்சயிக்க வந்தன. அவை காட்ட வந்த வல்ல. காட்டவும் வன்மை கொண்ட வல்ல' என்ற உண்மையை மனங்கொண்டே நூல்களைப் பயிறல் வேண்டும். மாந்தர்க்குளவாகிய குற்றம் நண்ணிடா அறிவனுக லின், இறைவனை 'வாலறிவன்' எனத்தேவர் தெரித்தனர்.

"பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் 'நற்ருள்' என்ருர்" என்பது பரிமேலழகர் தரும் விளக்கம். இவ்விளக்கத்தின் அருமை பெருமைகளைக்

"கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே"
என்ற அருணகிரிநாதர் திருமொழியானும்

"யானென தென்னுஞ் செருக்கற்று அவனது சீபாதத்தை
யணையுமாகலான்"

என்ற சிவஞான போதச் செம்மொழியானும்

"அதை யெய்தினுல் அந்தச் சின்மய பூரணவத்துவை

யடைந்த தன்மையுமாம்"
என்ற பாம்பன் அடிகளார் திருமொழியானும்

"அறவா நீ யாடும்போ துன்னடியின் கீழிருக்க"
வேண்டும் என்று காரைக்காலம்மையார் கூற்ருக நிகழ்த்தப்

படுந்திருத்தொண்டர்புராண மெய்ம் மொழியானும்

"சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்

கிறுமாந்திருப்பன் கொலோ ''

எனவரும் அப்பர் பெருமான் அருளுரையானும் உணர்க.

இதனுல் அந்நற்ருள் பிறவிப் பிணியையும் மறலிப் பிணியையுங் கடிவதெனல் உரைக்கப்பட்டது.

நற்ருளைத் திருவருளெனக் கொண்டுரைப்பர். இறைவனது அருளே சத்தியாம். அச்சத்தியை அறிவெனவும் இசைப்பர். என்னை? சிவம்—உண்மை, சத்தி—அறிவு; முருகன்—இன்பமெனச் சைவநூற்கண் உரைக்கப் படலானென்க. இதனுல் திருவருளே அறிவாம். இன்னும் இதனுனே நற்ருள் வாலறிவு கொண்டு திகழ்வதும் அறிதலாகும்.

இவ்வாறு திருவடி பிறவிப் பிணி தீர்த்தலை

'' அரிசி விளைத்தன் றமுதளித்த தேவைப்
புரிசிறக்கு மீசரிரு பொற்ருள்—தரிசித்தோர்
வேண்டும் வரமனைத்தும் மேவுவர் பார்மீதில்
மீண்டும்பி றவார்பெறுவார் வீடு. ''

என்ற பாடலும் உணர்த்தும்

கசு. நற்ருள் தொழல்

மக்களாய்ப் பிறந்தா ரனைவரும் மாக்களாய்ப் பிறழ்ந்தொழுகுதல் அவமேயாம். அது கருதியன்ரே, ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனுரும் உயர்திணை என்மனுர் மக்கள் என்னுது '' உயர்திணை யென்மனுர் மக்கட் சுட்டே '' என விதந்தோதுவாராயினுர். அன்றியு மக்களாய்ப் பிறந்தும் அன்னண மொழுகாரை ''மாவு மாக்களு மையறிவினவே பிறவு முளவே யக் கிளைப் பிறப்பே'' என்றஃறிணைப் பாற்படுத்தும். அஃறிணையுயிர்கள் உயர்ந்த வொழுக்கமுடையவாயின் அவற்றை '' மக்கடாமே ஆறறிவுயிரே, பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே '' என னுயர்திணைப் பாற்படுத்தும் நூற்பாவுரைத்தருளினுர்.

'' மாமரப் போலி இருப்பையும், வில்வப் போலி விளாவும், கவுதாரிப் போலி காடையும், புரவிப் போலி வேசரியுமாக வெண்ணப்படுமாறு மனிதப் போலி குரங்கெனப்படும். மனிதனை நரஃ என்றுரைக்கும் வடநூலார் குரங்கினை வாநரஃ என்பதும்

இக்காரணங்கருதியே யாகும். (வா = ஒப்பு.) மக்கள் தேவப் போலியாவர். மக்களது ஆன்மா பரமான்மப் போலியாம்".

ஆகலின் தேவநிலை விழைவார் அத்தேவர்க்கு உவப்பான வினைகளைப் புரிதல் வேண்டும். புரிந்தார் இப்பிறப்பிற்றனே மக்கட்டன்மையொடு தேவத்தன் மையுஞ் சிவணினராவர். அவரே அந்தணர் (பூசுரர்) எனவும் அவரிருக்கையே அந்தணரிருக்கை யெனவும் நறு நூல்களாற் போற்றுதலுறுவர். இன்னர் மேற் பால் பிறந்தார், கீழ்ப்பால் பிறந்தாரென்னுஞ் சாதி வேற்றுமையால் விளங்குவ ரல்லர் எனவே மக்கள் யாவருக்கும் இந்நிலை உரித்தே என்க. இவ்வாறே, இறைவழிபாட்டில் ஊன்றி நின்றர் தேவநிலை கடந்த இறைநிலை யெய்துவ ரென்பதும் உணரற் பாற்று.

இவ்வாறெய்துதற்கு ஆறமைப்பது கல்வியேயாம். அக்கல்வி பெற்றாரனைவரும்

"திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன்
சீருடைக் கழல்கள்"

எனுந் தெளிவுற்று, வாலறிவன் நற்றாள் வழிபட முயல்வர். அஃதொழித்து,

"சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பற்கழன்று பண்டம் பழிகாறும்—இற்செறிந்து"

மனைவி, மக்கள், ஒக்கல் எனும் பற்று முறுகி அவாநெறிப் படர்தல் கல்லாமைக்குக் காட்டேயாம். "மூக்கவாம் மணமனை கருனை முதலியவற்றேடு வல்சி மாந்தி' மழகளிறெனக் கொழுத் திருக்கின்ற தாமுஞ் சாதன் மெய்யென்பது நனி தெரிய வந்த பின்னரும் மாளாவொருவன் தாளே தொழாது வாளா சாமா றுள்ள வினையரை மதியா திடைந்து போந்து தமதறநிலை வழாது பேணி "நின்றாரையே" கற்றல் கேட்டலுடையார் பெரி யார் கழல் கையாற் றெழுதேத்த" என்றெடுத்திசைப்பாராயினர் காழிவேந்தருமென்க.

உலகின் கண் எத்தனையோ வகையுயிர்களுள. அவை அறி வின் திறத்தானே ஒன்றினு மொன்று உயர்ந்து திகழுமால். இவ்வுலத்துள்ள பிறவிகள் யாவற்றினும் மேம்பாடுடைய

தொன்றேயன்றி அமரரும் அவாவும்.பெற்றி கொண்டது மக்கட் பிறவியொன்றேயாம். ‘புவனியிற் போய்ப் பிறவாமையி னுணும், போக்குகின் றேமவ மேயிந்தப் பூமி’ எனுந் திருவாசகமும் காண்க.

எனவே இழிபிறவிகளாம் நாய், பன்றி முதலியவைகளை யொப்பவே மக்கட் பிறவியில் வந்தானும், உண்டு, புணர்ந்து, ஈன்று, ஓடி உறங்கி வாழ்ந்து மடியாது நல்வாழ்வு பெறல் வேண்டும் என்பது கருதியே திருவள்ளுவ நாயனுர் ‘வாலறிவன் நற்றாள் தொழுதி. தொழாயேல் கற்றதனுலாய பயனெவன் என்றறிவுறுப்பாராயினர்.

கல்வியின் பயன் வாலறிவன் நற்றாள் தொழலே என்பதை
“ எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னுகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்

என்னுந் தூக்கானு முணர்க இவ்வாறுணர்ந்தே பண்டைச் சான்றோர்களும் ஒழுகி வந்தன ரென்பதைக் கீழ்வருஞ் செய்யுளானும் பெறலாகும்

“ உள்ள நிறை கலைத்துறைக ளொழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்றே

கொள்ளுமுணர் வினில்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண்புடையார் ”
(திருத்தொண்டர் புராணம்).

‘ மலர்மிசை யேகினன் ” என்ற திருக்குறளின் மாட்சிமையை அடுத்த கட்டுரையில் காண்பாம்.

மொழி மாற்றங்கள்

டாக்டர். மா. சு. திருமலை, எம். ஏ., டி பில்.,
டாக்டர். கி. கருணாகரன், எம். ஏ. பிஎச். டி.

முன்னுரை :- சமுதாயத்தில் உள்ள பிரிவுகளுக்கு ஏற்றவாறு ஒரு மொழியில் பிரிவுகள் — கிளை மொழிகள் (Dialects) — தோன்றுவதையும் அக்கிளை மொழிகளால் மொழியில் ஏற்படும் மாற்றங்களையும் (Changes) கிளை மொழியியல் (Dialectology) விளக்குகிறது. உயிருள்ள மொழிகள், வழங்கப்படுகின்ற மொழிகள் எதுவும் இயற்கையாக ஒரே நிலையில் நிற்பதில்லை. காலம் போகப் போக மொழிகளில் மாற்றங்கள் தோன்றுகின்றன. தொல்காப்பியர் நூற்பாக்களைப் புரிந்து கொள்ள புலவர் துணை வேண்டியுள்ளது புறநானூறு மற்றும் அகநானூறு முதலிய நூல்களின் பாடல்களை இன்றைய தமிழன் ஏதும் பயிற்சியில்லாமல் விளங்கிக் கொள்ள முடியாது. ஏன் இன்றைய எழுத்துத் தமிழையே (Written Tamil) ஏதும் எழுத்தறிவில்லாத தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் புரிந்து கொள்ள முடிகிறது என்பதையும் பார்க்க வேண்டும உரையாசிரியர் "செறி தொடீஇ நீ இங்ஙனம் கூறுதலாற் பெறுவேனாயினும் நெடுநல் கங்குற் கனவின்கண் என் கொழுநன் என்னைக் கைப்பற்றினனாய்ப் போக" என்று எழுதும்போது நம்மால் சில சொற்களைப் புரிந்து கொள்ள முடிகிறது; சில சொற்கள் நமக்குப் புரிவதில்லை. இவ்வாறு புரிந்தும் புரியாமலும் இருக்கிற நிலைமை நமக்குச் சில உண்மைகளைத் தெரிவிக்கின்றது; மொழி முற்றிலும் மாறுவதில்லை. ஏற்படும் மாற்றங்கள் எல்லாச் சொற்களையுமோ ஒலிகளையுமோ பிறமொழியின் உறுப்புக்களையோ ஒரேயடியாகத் தாக்குவதில்லை. பழமைக்கும் புதுமைக்கும் பாலம் எப்பொழுதும இருந்து கொண்டே இருக்கும். அப்படிப்பட்ட பாலம் இருப்பதாலேயே பழைய இலக்கியங்களில் பாதியை நாம் நம்முடைய இன்றைய எழுத்துத் தமிழின் உதவியாலேயே அறிந்து கொள்கிறோம்.

பேசப்படுகிற, வழக்கு இழந்திராத மொழிகள் மாற்றம் அடைவதில் வியப்பில்லை என்பதை அறிவோம். இம்மாற்றங்கள் மொழிகளில் மெதுவாக ஏற்படுகின்றன என்று சொல்ல வேண்டும். காலம் போகிற போக்கில் படிப்படியாக மொழியில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று மொழியியலார் (Linguists)

பொதுவாகச் சொல்வார்கள். இம்மாற்றங்களை ஏற்படுத்துவதில் ஒருவகை 'சொற்களைக் கடன் வாங்கும் முறை' யாகும் (Lexical Borrowing). பிறமொழிகளிலிருந்து சொற்களை கடன் வாங்கும் இயல்பு மனித மொழிகள் எல்லாவற்றிற்கும் உள்ள பொதுவான குணம் ஆகும். கடன் வாங்காத மொழியே உலகத்தில் இல்லை என்று சொல்லலாம். ஒரு சமூகமும் இன்னொரு சமூகமும் தொடர்பு (contact) கொள்ளும்போது ஒலிகளை, ஒலியன்கள், சொல்லியன்கள், சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றைக் கொண்டும் கொடுத்தும் உறவு கொள்வது உலகம் முழுவதும் நாம் காண்கிற இயல்பு ஆகும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் இல்லாத கருத்தோ பொருளோ பிற சமுதாயத்தில் இருக்கலாம். பொருளோ கருத்தோ அது இருக்கும் சமுதாயத்திற்கு வரும் போது சொல்லும் கூடவே வருவது உலக இயல்பாகவே இருக்கிறது. தமிழிலே வழங்கும் எண்ணிறந்த வடமொழிச் சொற்கள் இதன் அடிப்படையில் வந்து வழங்குகின்றன என்றே சொல்ல வேண்டும் ஆனல் சொற்களைக் கடன் வாங்கித் தீரவேண்டிய தேவை மொழியின் தேவை அல்ல. ஏனென்றால் ஒரு மொழியில் முன்பே இருக்கக்கூடிய சொற்களை நீட்டியோ குறைத்தோ மாற்றியோ, வருகின்ற புதுக் கருத்துக்களையோ புதுப் பொருளையோ வெளிப்படுத்த முடியும். இந்த உள்ளுறையும் இயல்பை இன்று உலக மொழிகள் பலவற்றில் பயன்படுத்த முயல்கிறார்கள்.

கடன் வாங்குவது மனித மொழிகளின் இயல்பு என்றோம். ஆனல் கடன் வாங்கும் அளவு மொழி வேறுபடுகிறது என்றே சொல்ல வேண்டும். நமக்கு மிகவும் பழக்கமான திராவிட மொழிகளை எடுத்துக் கொள்வோம். தெலுங்கோ, கன்னடமோ, மலையாளமோ வடமொழியிலிருந்து கடன் வாங்கியிருக்கும் அளவுக்கு தமிழ் மொழி கடன் வாங்கவில்லை எனலாம். இதற்குக் காரணங்கள் பல. அவற்றை திராவிட மக்களின் சமுதாய வரலாறு அறிவியல் அடிப்படையில் எழுதப்படும்போது நம்மால் எளிதில் நன்கு அறிந்து கொள்ள முடியும் ஆனல் மொழியடிப்படையில் மிக முக்கியமான இரு காரணத்தைச் சொல்ல வேண்டும். முதல் காரணம்: தமிழ் வரிவடிவம்-நெடுங்கணக்கு-தமிழ் மொழியின் இயல்பை ஒட்டி உண்டு பண்ணப்பட்டிருக்கிறது. அதாவது மற்ற எந்த மொழியையும் மனதிலே கருதாமல் அறிவியல் அடிப்படையில் தமிழின் இயல்புக்கு ஏற்றபடியே வரிவடிவத்தைத் தமிழறிஞர்கள் வடித்து விட்டார்கள் அதனல் பிறமொழிச் சொற்கள் வந்து வழங்கினலும் அவற்றைத் தமிழ்ப்படுத்தியே வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தெலுங்கிலோ, கன்

னடத்திலோ, ஏன் மலையாளத்தில் கூட, வரிவடிவங்கள் வடமொழி அமைப்பிலேயே அமைக்கப்பட்டன. வரிவடிவங்கள் அமைப்பில் உள்ள ஒற்றுமை வடமொழியின் சொற்களை அப்படியே கடன் வாங்கிப் பயன்படுத்த உதவி செய்தது. அதனால் சொற்களில் மாற்றமும் ஒலிகளில் (Sounds) மாற்றமும் மிக விரைவிலேயே ஏற்பட்டது எனலாம்.

இரண்டாவது காரணம் தமிழ்நாடு எல்லாப் பக்கங்களிலும் திராவிட மொழிகளைப் பேசும் நாடுகளால் (கேரளம், ஆந்திரா, கருநாடகம்) சூழப்பட்டிருக்கிறது என்பதாகும். ஆந்திர நாட்டிற்கும் ஆரிய மொழிகள் பேசப்படும் நாடுகளுக்கும் நேரடி நிலத் தொடர்பு இருந்து வந்தது. ஆனால் தமிழ் நாட்டின் நிலைமை அப்படியில்லை. புற உலகத் தொடர்பு மற்ற திராவிடர் நாடுகள் வழியாகத்தான் இருந்து வந்தது.

இவ்விரு காரணங்கள் போக இன்னும் பல காரணங்கள் உண்டு ஆனால் அவற்றைத் திராவிடர் சமுதாய வரலாறுதான் விளக்க வேண்டும் அதாவது கடன் வாங்கும் அளவில் மொழிக்கு மொழி வேற்றுமை இருப்பதன் காரணம் மொழி அமைப்பைச் (Language Structure) சேர்ந்தது அன்று; அம் மொழிகளின் சமுதாய வரலாற்றைச் (Social History) சேர்ந்ததே என்று சொல்ல வேண்டும்.

ஒரு மொழி பிறமொழியிடமிருந்து சொற்களைக் கடன் வாங்குவது போலவே வாங்கிய அமைப்பையும் (sentence structure) கடன் வாங்க முடியும்; ஒலியன்களையும் (phonemes) கடன் வாங்க முடியும். ஒலியன்களைக் கடன் வாங்கும் என்பதை மேலே நாம் கண்ட தெலுங்கு கன்னட விளக்கம் தெளிவாக்குகிறது அல்லவா? இன்றைய தமிழிலே வாக்கிய அமைப்பு ஆங்கிலத்தின் துணையால் எவ்வளவோ மாறுபட்டுக் கொண்டிருக்கிறது அறிஞர் அண்ணாவின் பேச்சு ஆங்கிலத்தை அப்படியே தமிழ்ப்படுத்தியது போலப் பலநேரங்களில் இருக்கும் இதற்கு அவர் ஆங்கிலத்தில் சிந்திக்கிற கருத்துக்களைத் தமிழிலே தந்தார் என்பது மட்டும் காரணமல்ல. அவர் சொற்றொடர்களையும் ஆங்கில அமைப்பிலே பல இடங்களில் கையாளுவார். இது பல மொழிகளில் பயிற்சி உள்ளவர்களிடம் இயல்பாக வருகிறது என்றே சொல்லவேண்டும். இன்றைய தமிழ் உரைநடை மிக இளமையானது. ஆங்கில நீராலேயே பாதிரிமார்களால் வளர்க்கப்பட்டு அதன்பின் ஆங்கிலங் கற்ற எழுத்தாளர்களால் உருவாக்கப்படுவது. இதில் ஆங்கில வாடை வீசுவதைத் தவிர்க்க முடியுமா ?

இன்னொரு நல்ல எடுத்துக்காட்டைப் பார்க்கலாம். பேச்சு வழக்கில் நிகழ்காலத்திற்கும் இறந்த காலத்திற்கும் இடையில் வேற்றுமை இல்லை என்றே சொல்லவேண்டும். இதுவே நீண்ட நாளாக இருந்து வந்தது ஆனல் ஆங்கிலக் கல்வி பெருகப் பெருக இரண்டையும் வேறுபடுத்துகிற முறைதோன்றியது. ஆங்கிலக் கல்வி ருக்கி-சின் குழுவில் முதலில் லூஷாய்-மீசோ என்ற பிரிவினர் பேசுகிற மொழியில் பரவியது. அம்மொழியில் இறந்த காலத்தையும் தெளிவாகப் பிரித்துக் காட்டுகிறார்கள். அந்த மொழியே இப்போது ருக்கி-சின் குழுவில் எல்லோராலும் விரும்பி மதிக்கப்படுகிற மொழி. இம் மொழியின் தொடர்பால் காலப் போக்கில் நாடோ மொழியிலும் நிகழ்காலத்தையும் (Present tense) இறந்த காலத்தையும் (Past tense) பிரித்துக் காட்டுகிற முறை தோன்றிவிட்டது. மேலும் இந்திய-ஆரிய மொழிகளில் (Indo-Aryan) பயன்படுத்தப்படுகிற வளை நா ஒலிகள் திராவிட மொழிகளின் துணையாலேயே அம்மொழிகளில் ஏற்பட்டன என்று சொல்லலாம்

சொற்களைக் கடன் வாங்குவதற்கு என்ன காரணம் இருக்க வேண்டும்? சில காரணங்களை முதலில் குறிப்பிட்டோம் அவற்றையும் பிறவற்றையும் இன்னும் சிறிது விரிவாகக்காண முயல்வோம் புதுக் கருத்துக்களுக்கும் புதுப்பொருள்களுக்கும் நாம் பெயர் காணவேண்டி இருக்கிறது நீட்டி முழக்கிக்கொண்டு நம் மொழியிலேயே பெயர் உண்டுபண்ணிக் கொண்டிருப்பதை விட நமக்குத் தெரிந்த பிறமொழிச் சொல்லைப் பல நேரங்களில் அப்படியே பயன்படுத்தி விடுகிறோம். தமிழிலே கொச்சை வழக்கைப் பாருங்கள், ஒரு சிறிதே ஆங்கிலம் சுற்ற வரும் "டோர் (Door) பக்கத்தில் கிடக்கிறது, போய்ப்பார்" என்று சொல்லுகிறார். விளக்கை எடு என்று சொல்வதற்குப் பதிலாக லைட்டை (Light) எடு என்று சொல்கிறார். ஆங்கிலச் சொற்களை ஆங்காங்கு விரவிப் பேசுவதால் நம் 'ஞானத்'தைக் காட்டிக்கொள்கிறோம் சமூகத்தில் அப்படிப் பேசினல்தான் 'கவுரவம்' (Prestige) என்ற ஒரு நிலையும் நினைப்பும் நம்மிடையே இருக்கிறது. ஆனல் மேடை ஏறிப் பேசும் போது தூய தமிழில் கம்பீரமாகப் பேச வேண்டும் என்ற நிலைமை வந்துவிட்டது இருந்த 'கவுரவ' விதிகளின் விளைவைக் கிளை மொழியியல் பகுதி தெளிவாக விளக்குகிறது.

சொற்களில் என்ன என்ன வகைகளைக்கடனாக வாங்கி இருக்கிறோம் என்பதை நாம் ஆராய்வது பண்பாட்டில் என்ன என்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் காட்டும் தமிழிலே நடைமுறையில் வழிபாட்டுச் சொற்கள் வடமொழிச் சொற்

களாகவே இருக்கின்றன. பூஜை, கர்ப்பக்கிரகம், பிரகாரம், சுவாமி, அர்ச்சனை போன்றவை சிலசொற்களாகும். இச்சொற்கள் வடமொழியில் இருந்து தமிழிலே வந்து பயன்படுகின்றன. வட மொழிப் பண்பாடு தமிழிலே பெருகத் தொடங்கியதை இச் சொற் கள் நமக்குச் சொல்கின்றன. இனி இன்றைய தமிழில் இதே சொற்களைத் தனித் தமிழ்ச் சொற்களாக வழங்குவதை நம்மில் பலர் விரும்புகிறார்கள் அப்போது அவர்களுடைய பண்பாட்டு உணர்ச்சியில் ஏற்பட்டிருக்கும் புதிய மாற்றத்தைச் சொற்கள் நமக்குச் சொல்கின்றன எனலாம்.

பொதுவாக ஒரு மொழியில் வழங்கப்படும் கடன் சொற்களைப் பல தலைப்புக்களின் கீழ்வகைப் படுத்தினால் ஒருமொழியைப் பேசு பவர்களுக்கும் கடன் வாங்கப்பட்ட இன்னொரு மொழியைப் பேசு பவர்களுக்கும் எந்தவகையான தொடர்பு நிலவுகிறது என்பதை நாம் உணரலாம்.

தமிழிலே மிகப் பழங்காலத்தில் இருந்தே பிறமொழிச் சொற் கள் வந்து வழங்குகின்றன என்று சொல்லவேண்டும். ஆனால்- அச் சொற்களைத் தமிழ்ப்படுத்துகிற முறை இயல்பானதாக, உணர்ந்து செய்யப்பட்டதால் தமிழின் தனித்தன்மை மற்ற திரா விட மொழிகளில் இருப்பது போலப் பாதிக்கப்படவில்லை இத் தனித்தன்மையைக் காப்பதில் தமிழ் அறிஞர்கள் தொன்று தொட் டே மிகவும் கவனமாக இருந்திருக்கிறார்கள், பல்லவர் காலத் திற்குப் பிறகு வடமொழித் தொடர்பும் வடமொழிப்பண்பாடும் தமிழகத்திலே பரவத் தொடங்கிய போதிலும் தமிழ் மரபின் பிடிப்புத் தமிழறிஞர்களிடம் இருந்து போகவில்லை. நிறைய வட மொழியின் சொற்கள் வந்து வழங்கப்பட்டாலும் அவற்றின் உரு தமிழ் உருவாகவே இருந்தது. மிகப் பிந்திய காலத்தில் தான் மணிப்பிரவாள நடை மதிப்புப் பெற்றது. ஆனால் பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நடை கொஞ்சம் கொஞ்சமாக பழையபடி இயல்பான தமிழ் மரபுக்கு வந்து சேர்ந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

சொற்களைக் கடன் வாங்குவதற்குக் காரணம் மதிப்பு-கவுர வம் என்று சொன்னோம். தமிழிலே வடமொழித் தொடர்பு கூடிய காலம் பல்லவர்காலம் என்று சொல்லாம். சங்கால இலக்கியங் களில் கடவுளர் பெயர்கள் காணப்பட்டாலும், பொதுவாகக் கடவுளர்களைப் பற்றிச் சங்ககாலத் தமிழர் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. வடமொழியைப் பெரிதும் ஆதரித்த பல்லவரால் வடமொழிப் பண்பாடும் வடமொழித் 'தோத்திரங்களும்' தமிழி

லே புகுந்தன. நாளடைவில் வடமொழிப் பண்பாடு போலவே கடவுளர் துதிபாடும் வழக்கம் தமிழிலும் பெரிதாகிவிட்டது. இவை உண்மைகள். தமிழர் வரலாற்றையும் இலக்கிய வரலாற்றையும் கற்றவர்கள் அறிவார்கள். நிலப்பிரபுத்துவ செல்வாக்குப் புதிய பொலிவு பெற்று அரசு செல்வாக்குடன் ஒன்றுபட்ட காலம் பல்லவர்காலம். அக்காலத்திலே ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்களின் மனப்போக்கும் செயலும் கவுரவமாகத் தெரிந்ததில் ஏதும் வியப்பில்லை.

ஆனால் 'கவுரவம்' என்பதால் மட்டும் சொற்கள் ஒருமொழியில் இருந்தே இன்னொரு மொழிக்குப் போவதில்லை. இன்று தமிழிலே எண்ணிறந்த கலைச் சொற்களைப் பயன்படுத்துகிறோம். அச்சொற்களில் பல தமிழாக்கப்பட்டுப் பயன்படுபவையாகும் வேறு பல அப்படியே பயன்படுகின்றன. வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றம் தன் மனம் போன போக்கில் சொற்களை உற்பத்தி செய்கிறது அச் சொற்கள் எல்லாவற்றையும் மொழி பெயர்த்துக் கொண்டிருக்க முடியாது. பல மொழிகளில் அவை அப்படியே பயன்படும். இது இயற்கையின் நியதி இவ்வாறு வந்து வழங்கும் சொற்களைக் **கல்விச் சொற்கள்** அல்லது **கற்ற சொற்கள்** என்று சொல்லாம்

இதுவரை ஒரு மொழி மற்றொரு மொழியிலிருந்து கடன் வாங்குவதால் ஏற்படும் மாற்றங்களை ஒரு சிறிது கண்டோம். ஆனால் மொழிகள் பிறமொழித் தொடர்பாலோ (Language contact) கடன்வாங்குவதால் (Borrowing) மட்டுமோ மாற வேண்டியது இல்லை இதனை கிளைமொழியியல் பகுதி ஓரளவு விளக்குகிறது. கிளைமொழியியல் பிரிவு எப்படி மொழி பல கிளைமொழிகளாக சமுதாயப் பிரிவின் அடிப்படையில் ஏற்படுகிறது என்பதைத் தெளிவாக்குகிறது. தமிழிலே வழங்கப்படும் பல கிளைமொழிகளில் **ளகரமும் ழகரமும்** ஒன்றாகவே (ளகரமாகவே) பயன்படுகின்றன. இரண்டிற்கும் பொதுவாக வேற்றுமை இல்லாமல் போய்விட்டது. இந்த மாற்றத்தை மொழியில் ஏற்படும் **அகமாற்றம்** (Iuternal Change) என்று சொல்ல வேண்டும் அதாவது பிற மொழித் தொடர்பு இல்லாமல் ஒரு மொழிக்குள் ஏற்படும் மாற்றத்தை அக மாற்றம் எனறு சொல்லலாம்.

இந்த அகமாற்றம் மொழி உறுப்புக்கள் எல்லாவற்றிலும் நடைபெறுகிறது எனலாம் மேலே சொல்லப்பட்ட எடுத்துக் காட்டு ஒன்றில் **தொடி** என்ற சொல் **வளையலைக்** குறிக்கப் பயன்

பட்டதைக் கண்டோம். இன்று அச்சொல்வழக்கில் இல்லை தமிழிலே (நாஞ்சில் நாட்டு பேச்சு வழக்குத்தவிர) இன்று எழுத்தளவில்தான் ரகர றகர வேற்றுமை பயன்படுகிறது என்று சொல்லலாம். மெல்லின எழுத்துக்கள் ஆறையும் தனி ஒலியன்களாக எடுத்துக் கொள்ளாமல் இருக்கலாம். எழுத்துத் தமிழிலே பழைய சொல்லியன்களையும், சொல்லமைப்புக்களையும் சொற்றொடர்களையும் நாம் வலிந்து பயன்படுத்தினாலும் உயிருள்ள நடைமுறைத் தமிழில் அவை பயன்படவில்லை யாராவது 'கூறற்பாற்று' என்று இயல்பாகச் சொல்கிறார்களா? சொற்பொருளிலும் (Semantic Concept) தமிழில் ஏற்பட்டிருக்கும் அகமாற்றங்கள் நிறைய என்றே சொல்லலாம். ஆனால் முன்பு சொன்னது போல் மாற்றங்கள் முழு அளவில் நடைபெற்றிருக்கவில்லை என்பதால் நாம் பழைய காலத் தமிழை எப்படியோ தட்டுத் தடுமாறிப் புரிந்து கொள்கிறோம்,

சொற்கள் திடீரென்று வழக்கிழந்து விடுவதில்லை. கண் மூடி விழித்த பின் முன்பு பேசிய சொற்கள் எங்கே என்று நாம் தேடிக் கொண்டிருப்பதில்லை. அவை சிறிது சிறிதாக வழக்கிழந்து போய்விடுகின்றன. என்றாலும் சில சமயங்களில் சில சொற்கள் வழக்கிழந்து போய்விடலாம் என்றும் சொல்ல முடியும்.

இன்று சொற்களின் தேவை பெருகி விட்டது. நாம் அன்றாட வாழ்வில் காணும் புது நோக்கும் அனுபவங்களும் புதுப் புதுச் சொற்களைத் தோற்றுவிக்கும் தேவையை உண்டாக்குகின்றன. நம்மால் சொல்லைக் கடன் வாங்க முடியாவிட்டால் முற்றிலும் முன்பின் ஏதும் பழக்கமில்லாத, பயன்படுத்தியிராத சொல்லை உண்டு பண்ணலாம். ஆனால் இம்முறையை நாம் மிகக் குறைந்த அளவிலேயே பயன் படுத்துகிறோம். அதுவும் பொதுவாகக் கற்பனைப் பெயர்களைப் படைக்கும்போதே இவ்வாறு இதுவரை முன்பின் கேட்டிராத முற்றிலும் புதிய சொற்களைப் படைக்கிறோம். இரண்டாவதாக நம்மிடம் இருக்கும் சொற்களைச் சேர்த்துப் புதிய சொற்களைப் படைக்கலாம்.

சொற்களில் மாற்றங்கள் மெதுவாகவே மெள்ள மெள்ள ஏற்படுகின்றன என்றோம். சொற்களில் ஏற்படும் மாற்றங்களை விட மெதுவாகவே மொழியமைப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று சொல்ல வேண்டும். திடீரென நாம் பல மாற்றங்களை நமக்குள் ஏற்படுத்திக் கொள்ள முடியும். பல நேரங்களில்

பேசும் முறையிலும் இவ்வாறு திடீரென மாற்றங்களைத் தனி நபர்களாக நாம் ஏற்படுத்திக் கொள்கிறோம். இன்றிலிருந்து சங்கத் தமிழிலே பேசுவது என்று சூளுரைத்துத் தொடர்ந்து பேசவும் செய்யலாம் ஆனால் இம்மாற்றம் உடனே பிறர் அனைவரும் பேசுகிற இன்றை தமிழ் அமைப்பில் (Modern Tamil) எந்த விதமான மாற்றத்தையும் ஏற்படுத்தாது. மாற்றங்கள் பலரிடத்து ஏற்பட்டு, பின் அவை மொழி முழுவதும் பயன்படுகிற பொது விதியாக வேண்டுமானால் அதற்கு அதிக அளவு காலம் பிடிக்கும்.

வயது ஆக ஆக முந்திய காலத்தில் நாம் பேசிவந்த பேச்சும் தற்காலத்தில் நாம் பேசுகிற பேச்சும் நம் நினைவுக்கு வருமானால் என்னென்ன புதுப் புதுச் சொற்களைப் புதுப்புது முறையில் முறையில் அமைத்துப் பயன்படுத்துகிறோம் என்பதை அறியலாம். இது வயது வந்தவர் கதை.

ஆனால் மொழியை முதன் முதலில் கற்கிற குழந்தைக்கு எல்லாமே ஒன்றுதான். தான் வந்து பிறந்திருக்கிற சமுதாயத்தின் மொழியை எந்தவித முன்னறிவிப்புமின்றி குழந்தை கற்றுக் கொண்டு விடுகிறது. எச்சொல் புதிய சொல், எந்த அமைப்புப் புதிய அமைப்பு என்ற பேதாபேதம் அதற்குக் கிடையாது அதன் முன்னால் பேசப்படும் அமைப்புக்களும் (Structures) சொற்களும் அதற்கு முந்திய கதையைச் சொல்வதில்லை. ஆனால் வயது வந்தபிறகு அதன் சூழ்நிலையில் ஏற்படும் மொழி மாற்றங்களைத் தானாகவே கிரகித்துக் கொள்கிறது. அதாவது, குழந்தை கற்கும் மொழி விதிகள் அதற்கு அடிப்படையானவையாக இருக்கும். அது வளர்ந்து பெரியவர் ஆகும்போது ஏற்படும் விதிகளை அவ்வடிப்படை விதிகளோடு சேர்த்துக்கொள்கிறது. ஆகவே அடிப்படை விதிகளும் அவை தொடர்ந்து சேர்ந்திருக்கும் மாற்றல் விதிகளும் அடிப்படையாகி விடுகின்றன. இவ்வாறு தலைமுறைத் தலைமுறையாக மொழியில் மாற்றங்கள் மெள்ள மெள்ள ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று சொல்லலாம்.

இலக்கியத்தில் கொள்கை முழக்கம்

புலவர் தி நா அறிவு ஒளி

(சென்ற இதழின் தொடர்ச்சி)

நல்லமகளிரின் நடையிலும் இயக்கத்திலும் அமைதி நிலவவும். நற்பண்புடைய மளிர் நிலம் வடுப்படாமல் நடக்கவேண்டும் சிலர் குதிரை போல நடப்பதும், போர் மறவர் போல் நிலத்தை மிதித்துத் துவைத்துச் செல்வதும் காண்கிறோமே! அவர்களைப் பார்க்கும் போது சாத்தனாரின்,

"செந்தளிர்ச் சேவடி நிலம்வடு வுறாமல்
மலர்கொய்யப் புகுந்தனள் மணிமே கலையென்"

[மேகலை: 3-மலர்வனம் புக்க காதை: 159-71] என்ற பாடற்றொடர் துன்ப உணர்வோடு நம்மகத்திற் றோன்றாமற் போகுமா? நடையமைதி ஒருவரின் நல்லியல்பையும் காட்டக்கூடும். மெல்லியலார் நடையில் மென்மை இருப்பது ஒரு தனியழகாகும்.

பெண்டிர் நெஞ்சம் காதல் நிழலில் களைப்பாறத் தவிக்கும் தன்மையது. துறவு மேற் கொண்டாலும் காதலுணர்வின்பால் பெண்ணுள்ளம் துவளும் பான்மையது-என்ற வாய்மையை மணிமேகலை பண்போவியத்தில் ஆசிரியர் சாத்தனார் சுட்டிக் காட்டுகிறார். திண்ணிய நெஞ்சினராகிய பெண்டிரே துறவில் நிலைத்திருக்கமுடியும்; ஆயினும் மனப்போராட்டம் இடையிடை புயலென எழுந்து உணர்வுக்கடலை அலைக்கழிக்கும் என்பதையும் காட்டியுள்ளார். பெண்ணுணர்வையும் மகளிர் மனவியல் நுணுக்கத்தையும் சாத்தனார் தெள்ளெனக் காட்டும் திறம் நனி போற்றற் பாற்று.

துறவறம் ஏற்றல் எளிது; அதில் நீடு நிலைத்து நிற்றல் அரிது மணிமேகலையின் இளமைத் துடிப்பு-கன்னிப் பருவ அவா அவள் நெஞ்சில் கரந்திருந்து வந்ததை வாய்ப்பமையும் இடங்களில் மெல்லனக் காட்டியுள்ளமையை நுண்ணிதின் உணர வேண்டும். இயல்பு நவிற்சி முறையில் சாத்தனார் எத்துணை வல்லுநர் என்பதை அவருடைய கலைநுட்பம் மிக்க பண்போவியப் படைப்பிலிருந்து உறுதி செய்யலாம்.

உவவனத்திற்குச் சுதமதியோடு மணிமேகலை மலர்கொய்யச் சென்ற போது தொலைவில் வரும் உதயகுமரனின் தேரின் மணி

யொலியைச் செவியாற் கேட்ட அளவில், 'வருபவன் உதய குமரன்' எனச் சுதமதிக்குக்கூறுகிருள். காதலனின் தேர் மணி யொலியைத் தனித்துப்பிரித்துணரும் பெண்மைத் தன்மையை ஆசிரியர் நுண்மையாய்க் காட்டியுள்ளார்.

சோலையில் மணிமேகலையைக் கண்ட உதயகுமரன் அவளைப் பரத்தை மகளாகக் கருதிக் காதலுரையாடிய போது அதனல் மணிமேகலை சீற்றம் கொள்ளவில்லை மாருக, "பொருள் விலை யாட்டி யென்று இகழ்ந்தனனுகி நயந்தோன் என்னது புதுவோன் பின்றைப் போனது என்னெஞ்சம்; எனத் தன்னிரக்கத்தோடும் காமத் தவிப்போடும் நொந்துரை மொழிகிருள்" பிறகு, இதுவோ அன்னுய் காமத்தியற்கை? இதுவேயாயிற் கெடுக தன் திறம்' எனக்கூறி நெகிழ்ந்த நெஞ்சை நிலைக்குக் கொண்டுவருகிருள் மணிமேகலை.

மனம் உணர்ச்சி வெள்ளத்தில் இழுத்துக்கொண்டு ஓடும்; அப்போது அறிவாகிய அணையிட்டு நெஞ்சை நேர்மை நிலைக்கு உயர்த்திக் கொள்வதே நல்லோர் கடமை என்பதைக் கதை வழி உணர்த்துகிருர்!

அம்பலத்தில் உணவளிக்கும் மணிமேகலையைக் கண்டு; உரையாட உதயகுமரன் வந்தான். அவனைக் கண்டதும் மணி மேகலை உள்ளம் குழைகிருள்; அவளுணர்ச்சி நெகிழ்கிறது. அவளையும் மீறி அவள் நெஞ்சம் ஓட்டைக் குடத்தினின்றும நீர் ஒழுகுவது போல வழிந்து அவனிடம் ஓடுவதைச் சாத் தனர் சுட்டிக் காட்டுகிருர். அம்மட்டோ? 'இறை வளை முன்கை ஈங்கு இவன் பற்றினும், தொன்று காதலன் சொல் எதிர் மறுத் தல் நன்றி யன்று என நடுங்கினள்' என அவள் மெய்ப் பாட்டு நிலையையும் விளக்குகிருர். ஆயினும், 'சென்ற விடத்தாற் செலவிடாது தீதொரீஇ நன்றின் பால் உய்ப்பது அறிவு' மணி மேகலையின் அறிவு. ஆகவே அவள் துறவு சிதையாது செழித் தது. ஆடவர் செய்தி அறிகுநர் யார்?' என எண்ணித் தன்னுருவைக் காயசண்டிகை வடிவமாக மாற்றிக் கொள்கிருள் மேகலை! மனவியல்பைக் காட்டி, அதை வெல்ல வேண்டிய முறையையும் காட்டுகிருர் புலவர். இது இலக்கியத்தின் கடமையாம்.

அகவாழ்வுச் செம்மையும் புறவாழ்வுச் செம்மையும் அற வாழ்வுச் செம்மையும் அரசாட்சிச் செம்மையாலேயே அமையும். என்றும் உள்ள உண்மை இது.

ஆட்சியில் மாட்சி குறைந்தால் இல்லறம்-துறவறம் இரண்டும் அழியும். மகளிர் மனமும் உடலும் மாசடைந்தால் உயிரினமே நோயுற்று மாயும்; வாழ்வு சுடுகாடு ஆகும். கற்பறமும் சால்பறமும் நிலைத்து நிற்க அறநெறி அரசு அமையவேண்டும். எந்த நாடு இந்த உண்மையைப் புறக்கணிக்கிறதோ; அஃது அழிவை - இழிவை - வீழ்ச்சியை அடைவது திண்ணம். வரலாறு வளமான சான்றுகளை அளவின்றி வழங்குகிறதன்றோ?

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்றால்"
[மேகலை: 22-சிறை செய் காதை : 208 - 209]

என்ற சாத்தனார் பொன்மொழி நிலைத்த மெய்ம் மொழியாகும்.

"அரசியல் நடாத்துவோர் நேர்மையும் நடுநிலைமையும் உடையராயிருத்தல் வேண்டும் ஆட்சியில் நேர்மை இல்லாது போனால் இயற்கையின் கோள்களும் நிலைமாறும்; அதனால் மழை குறையும்; வறுமை சூழும்; வையம் வாடும்; எல்லா உயிரும் உணவும் நீரும் இன்றித் துயருறும். உலகத்துயிர்கள் எல்லாம் உலகாளும் மன்னவனது உயிர் எனக் கூறப்படும் தகுதிப்பாடு இல்லாமற் போகும்" என்பது சாத்தனாரின் கருத்தாகும்.

"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரி வறங்கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதி யின்றாகும்"
[மேகலை : 7— துயிலெழுப்பிய காதை: 8—12.]

அரசு நெறிகோடினால் இயற்கை திரியுமோ; திரியாதோ மக்கள் வாழ்க்கை துன்பம் மிக்கதாகும்.

மக்களின் துன்பம் நீங்க வேண்டும் என்பதே உலகத்துச் சான்றோர்கள் கொள்கை. சாத்தனாரும் துன்பம்பற்றி விரிவான ஆய்வு செய்துள்ளார்.

துன்பம் அறிவைக் கொல்லும் படை; துன்பத்தின் உண்மை தெளிந்தால் அதை வெல்வது எளிது. அறவண அடிகள் வாய்மொழி வாயிலாகச் சாத்தனார் புத்த சமய நெறிப்படி துன்பத்தின் இயல்பையும் அதனை வெல்லும் முறையையும் விளக்குகிறார்.

" உலகில் பிறந்தோர் அடைவது துன்பம்; பிறவாதநிலையடைந்தோர் அடைவது பெரும்பேரின்பம். ஆவல் (பற்று) காரணமாக அமைவது பிறப்பு. பற்றின்மையால் அடையும் பிறவாமையால் இன்பம் வாய்க்கும்.

" துன்பம், துன்ப நீக்கம், துன்பத் தோற்றம், துன்ப நீக்க நெறி" என்ற நான்கு வகை வாய்மையை உணர்ந்து. காமம் - கொலை - கள் - பொய் - களவு என்ற ஐந்து தீத்தொழில்களையும் முழுதும் நீக்கும் நெறி ஐவகை யொழுக்கமாகும். (பஞ்ச சீலம்) அறிவுடையோர் ஐம்பெருங் குற்றங்களையும் அறவே துறத்தல் வேண்டும். பரத்தமைக்கு இவ்வைவகைத் தீயொழுக்கங்கள் மீது ஆவல் மிகும். இத்தீமைகளை மனத்தாலும் எண்ணாது துறந்தால் வாழ்வில் துன்பம் நீங்கும்; இன்பம் மலரும்

" பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்றோர் உறுவது அறிகஎன்று அருளி
ஐவகைச் சீலத்து அமைதியுங் காட்டி
உய்வகை இவைகொள் என்று உரவோன் அருளினன் "
[மேகலை: 2 — ஊரலர் உரைத்த காதை: 64 — 69]

" துன்பம் தோற்றம் பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றிலி காரணம்
ஒன்றிய உரையே வாய்மை நான்காவது "
[மேகலை; 30 — பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை: 186 — 188]

" கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்
உள்ளக் களவும் என்று உரவோர் துறந்தவை
தலைமையாக் கொண்டநின் தலைமைஇல் வாழ்க்கை
புலைமை ..."
[மேகலை: 24 — ஆபுத்திரன் நாடடைந்த காதை: 78 — 80]

" துன்பம் ஒரு கொடிய அடிமைத்தனம். துயர அடிமைத் தளையினின்றும் விடுதலை பெறுதலே இன்பம் ஆகும். குற்றங்களே துன்பம் தோன்ற அடிப்படையாகின்றன. குற்றங்களுள் மிகக்கொடியன இவையெனத் தெளிந்து அவற்றை விலக்கினால் துன்பம் குறைந்து இன்பம் நிறையும். "

மக்கள் உடம்பு, உயிரோடு பொருந்தியுள்ள வரையிலுந் தான் இயங்கும். உடம்பின் குறைகளை உலகோர் உணராமல் இருத்தல் கூடாது. அழியும் உடம்பை நிலையானதென எண்ணி இழிநிலையான தீவினை நாடி, மக்கள் கெடுவதைக் காண்கிறோம்.

சாத்தனார் புத்த நெறியின் கொள்கை நோக்கில் உடம்பின் உண்மையைச் சுதமதி வாயிலாக உதயகுமரனுக்கு உரைக்கு முகத்தான் உலகினர்க்கு அறிவுறுத்துகிறார்.

"வினையால் வந்தது உடம்பு; வினை விளைவதற்கு இவ்வுடம்பே வினை நிலமாக அமைந்துள்ளது. அழகு படுத்திப் புனையப்படும் மணிப்பொருள் முதலிய ஒப்பனைப் பொருள்களை நீங்கிவிட்டால், உடப்பு புலால் நாற்றத்தையே வெளிப்படுத்தும் உடம்பு நாளேற ஏற முதுமையடைந்து, இறுதியில் சாதலையடைந்து அழிவதாம்; கொடிய நோய்கள் தங்குகின்ற நோய்க் கோட்டை அது பற்றுகளுக்குப் பற்றும் இடம் உடம்பு; குற்றங்களின் கொள்கலமும் ஆம் புற்றினுள் ஒளிந்து கிடக்கும் பாம்பு போல் பகைமை கரந்து வாழும் புற்றே இம்மெய். அவலம், கவலை, கையாறு, அழுங்கல் என்னும் பல்வகைத் துன்பங்களும் நீங்காத மனத்தை உடம்பு தன்பாற் கொண்டுள்ளது. இவ்வுடம்பின் புறக்கோலத்தை மட்டும் கருதாமல், உட்புறமும் நோக்கி நினைப்பது அறிஞர்க்கு மிக இன்றியமையாத தாகும்!"

'இசைபடு தீஞ் சொற்களால்' சாத்தனார் காட்டும்' மெய் ஓவியம் இது'.

"வினையின் வந்தது வினைக்கு விளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத்து இடுவது
மூப்பு விளி வுடையது தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றுஇடம் குற்றக் கொள்கலம்
புற்று அடங்கு அரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையாறு அழுங்கல்
தவலா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இது ......!
[மேகலை. 4 — பளிக்கறைபுக்க காதை: 114 — 120]

நான்கு வகைத் துன்பங்கள் சாத்தனாரால் குறிக்கப்படுகின்றன. வருத்தம் தோன்றி நிற்பதை 'அவலம்' என்றும், 'என்ன செய்வேனோ?' எனத்திகைத்து வாடுதல் 'கவலை' எனவும், துன்பத்தால் மயங்கி அறிவழிதல் 'கையாறு' என்றும், வாய்விட்டு அல்லலால் அழுவது 'அழுங்கல்' எனவும் வகை செய்துள்ளார். இத்தனைத் துயரங்களையும் வெல்ல முயல்வதே அறிவின் ஆற்றல் என உணர்த்துகிறார் புலவர்.

துன்பம் நீங்க உயிரினம் கடைத்தேறச் சாத்தனார் புத்தர் நெறியும் கொள்கையும் சிறந்த தென்பதை நூலுள் ஆங்காங்கு விளம்புகிறார்.

உலகத் துயிர்கள் உணர்வு பாழாயின. மெய்ப்பொருளான அறம் வழங்க வேண்டிய உயிரினத்தின் காதுத் துளைகள் அறத்தைச் செவிமடுக்காமல் தூர்ந்தன. இவ்வுலகோர் அறிவினை யிழந்து வறுமையுற்றனர் இவ்வாறு பாழ் நிலையுற்ற காலத்தில் அறம் பெருமையோடு சிறந்தோங்கி நிலைக்கப் புத்தர் தோன்றினார். ஒளியில்லாமல் இருள் சூழ்ந்து தடுமாற்றம் எங்கும் இருந்த போது ஓர் அழகிய இளஞாயிறு தோன்றியதைப் போலப் புத்தர் தோன்றினார்" என்கிறார் சாத்தனார்.

"உயிர்கள் எல்லாம் உணர்வுபாழ் ஆகிப்
பொருள் வழங்கு செவித்துளை தூர்ந்து அறிவு இழந்த
வறந்தலை யுலகத்து அறம் பாடு சிறக்கச்
சுடர்வழக்கு அற்றுத் தடுமாறு காலைஓர்
இளவள ஞாயிறு தோன்றியது என்ன
நீயோ தோன்றினை! நின்னடி பணிந்தேன்!"
[மேகலை: 10 — மந்திரங் கொடுத்த காதை: 7 — 12]

புத்தர் ஆதி முதல்வர்; அறமாகிய திகிரியை உருட்டுபவர் அவர் மக்களைப் பிறப்பு — இறப்பு என்ற மிகுந்த துன்பத்தினின்றும் நீக்கி விலங்குகளையும் தமக்குள் அஞ்சத்தக்க பகைமை கொள்ளாதனவாக வாழத்தக்கன செய்தார். எல்லா உயிரும் தமக்குள் ஒற்றுமையுடையனவாய் வாழ்க என அருளால் மனமிரங்கி உருக முற்காலத்தில் எல்லா உயிர்களும் உணருமாறு அறமுறைத்தார். புத்தர் மகத நாட்டின் தலைநகரமாகிய இராசக் கிருக நகரின் அண்மையில் உள்ள கிடுத்திர கூடம் என்ற மலைக் கருகில் மேற்கூறிய அறம் உரைத்தார்"

"ஆதி முதல்வன் அறவாழி யாள்வோன்
மாதுயர் எவ்வ மக்களை நீங்கி
விலங்கும் தம்முள் வெரூஉம் பகைநீங்கி
உடங்கு உயிர் வாழ்க என்று உள்ளம் கசிந்து உகத்
தொன்று காலத்து நின்று அறம் உரைத்த
குன்ற மருங்கிற் குற்றம் கெடுக்கும் ..."

[மேகலை: 10 — மந்திரம் கொடுத்த காதை: 61 — 68]

பூத்த அறத்தின் முதல்வன் புத்தன் இயல்பை விளக்குவது போல உலகினர்க்கு நுண்ணறம் புகட்டுகிறார் நுண்மாண் நுழை புலச் சாத்தனார்.

"தனக்கென வாழாமல் பிறர்க்காக, பிறர் நலனுக்காக உரிமை பூண்டவன்; இன்பமாகிய செவ்வியை எல்லா உயிர்களும் அடைய அருள் என்ற அறத்தைப் பூண்ட ஒப்பற்ற பெரிய

மேற்கோளினுல் அறக்கதிராழி உருட்டியவன்; காமத்தை வென்ற வன் புத்தன்!" எனும் பாராட்டில் அரிய பாடம் புதைந் துள்ளது!

"தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
இன்பச் செவ்வி மன்பதை எய்த
அருளறம் பூண்ட ஒருபெரும் பூட்கையின்
அறக்கதிர் ஆழி திறப்பட உருட்டிக்
காமற் கடந்த வாமன்...,,

[மேகலே: 5 — 73 — 77]

'அருளும் அன்பும் அரிய உயிர்களேக் காக்கும் ஒப்பற்ற பெரிய மேற்கோளும் நீங்காத நோன்பினே உடையவர் புத்தர்' எனக்கூறி, அக்கடமைகளே நாமும் ஏற்றெழுக ஒளிகாட்டுகிருர் புலவர்:

"அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பும்
ஒருபெரும் பூட்கையும் ஒழியா நோன்பிற்
பகவன்..."

[மேகலே: 3 — மலர்வனம் புக்க காதை: 59 – 61]

மேற்காட்டிய புத்தரின் கொள்கைக்குக் கதை வழி விளக்க மாக ஆமகனேச் சாத்தனுர் அமைத்துக் காட்டுகிருர்.

ஆமகன் எல்லா உயிர்களிடமும் அன்பும் அருளும் பூண்டு அவற்றை ஓம்பி உணவூட்டுகிருன் தன்கையில் ஐயம் ஏற்கும் கலத்தை ஏந்திச் சென்று குற்றமற்ற சிறப்பினேயுடைய இல்லறம் நிகழ்த்துவோரின் வீடுகள் தோறும் சென்று உணவு வாங்கி வருவான். அதனேத் தான் மட்டுமே உண்ணுமல், காண இயலா தவர் (குருடர்), கேட்க இயலாதவர் (செவிடர்) முடமானேர், காப்பாற்றும் உறவின் முறையினர் இல்லாத ஏதிலர், நோயால் துன்புறுவோர், முதலிய வறியவர்களே 'வருக' என ஆமகன் கூவியழைப்பான். அழைத்துத், தன்பால் உள்ள உணவை அவர்களுக்கு அளிப்பான் ஏழையர் உணவு உண்டு பசியாறு வதைக் கண்டு மனம் மிக மகிழ்வான் அவர்கள் உண்ட பிறகு எஞ்சிய கொஞ்சம் உணவைத்தான் உண்டு மகிழ்வான் ஆமகன், பின்னர் உறங்குவான் அமைதியாக! பிறர்க்குதவாதவன் மகிழ்வோடும் அமைதியோடும் உறங்க வியலாது என்பதனே நாம் உணர வேண்டும்.

"ஐயக் கடிஞை கையின் ஏந்தி
மையறு சிறப்பின் மனேதொறு மறுகிக்
'காணர் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக்கு உற்ருேர்
யாவரும் வருக' என்று இசைத்து உடன் ஊட்டி
உண்டு ஒழி மிச்சல் உண்டு ஓடு தலே மடுத்துக்
கண்படை கொள்ளும் காவலன் தானென்"

[மேகலே: 13 - ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை: 109 - 115]

ஆமகன் அறம் புரியத் தடையாக மழை பொழிந்தது: வளம் நிறைந்தது நாட்டில்.

அதனல் வெளி நாட்டிற்குச் (சாவகம்) சென்று அங்குள்ள ஏழைகளிர் கொடும்பசி தணிக்க முற்பட்டான் ஆமகன் [ஏழை நாடுகளுக்கு வளமுள்ள நாடு உதவி செய்யவேண்டும் என்ற முழக்கத்தை அன்றே சாத்தனுர் கதையினுள் கருத்து விதை புதைத்துச் சுட்டிக் காட்டும் திறனை ஆழ்ந்தாய்ந்து பாராட்ட வேண்டும்!]

ஆனல் —

ஆமகன் சென்ற கப்பல் புயலால் மணிபல்லவத் தீவையடைகிறது. கரையிறங்கித் தீவைக்காண கலத்திலிருந்தோர் சென்றனர். எல்லாரும் கப்பலுக்கு மீண்டனர்; ஆமகன் மீள்வதற்குள் கலம் சென்று விடுகிறது. ஆமகன் மணிபல்லவத்தில் தன்னந் தனியனுகத் தங்கிவிடுகிருன். அத்தீவில் மக்கள் யாரும் வாழவில்லை. தான் மட்டும் தனித்து அமுதசுரபி அளிக்கும் இனிய உணவை உண்டு வாழ ஆமகன் விரும்பவில்லை. 'பிற உயிர்களைக் காக்க வேண்டிய மாபெரும் அமுதசுரபியைக் கொண்டு தன்னலத்தோடு என்னுயிரை மட்டும் காப்பாற்றிக் கொண்டிருக்க மாட்டேன்'. எனக்கூறிய ஆமகன், அமுதசுரபியை அத்தீவிலுள்ள கோமுகி என்ற பொய்கையில் இட்டான். அவன் உண்ணு நோன்பு மேற்கொண்டு உயிர் துறந்தான். அவ்வமுதசுரபி ஆண்டுக்கொருமுறை வெளிவர வேண்டுமென்றும், அருளறம் பூண்ட ஆருயிர் ஓம்புவோர் யாரேனும் அங்கு வந்தால் அவர் தம் கையில் அஃது சேரவேண்டும் எனக்கூறினன். அவ்வாறே பின்னர் மணிமேகலைக்கு அவ்வமுதசுரபி கிட்டியது.

இக்கதைப் பகுதியில் சாத்தனுர் உலகளாவிய ஒப்புரவு அறமும் பொதுமை யருளுணர்வும் சாற்றுகிருர்.

"அங்கு வாழ்வோர் யாவரும் இன்மையின்
மன்னுயிர் ஓம்பும் இம் மாபெரும் பாத்திரம்
என்னுயிர் ஓம்புதல் யானே பொறேஎன்" என்ற

ஆமகனின் தன்னல மறுப்புத் தனிப் பேராற்றல் கொள்கை எண்ண எண்ண வியப்பும் உவகையும் ஊட்டும் புரட்சி இயல்புடையதாகும்.

பல நாட்டுக் கண்ணேட்டத்தில் உயிரின வாழ்க்கைச் சிக்கலை அருளற நெறியில் சாத்தனுர் ஆராய்வதை மணிமேகலை யுணர்த்துகிறது. 'உயிரினம்' என்ற பரந்த பொதுக் கண்ணேட்டம் மணிமேகலையால் திட்டவட்டமாக உணர்த்தப் பெறுகிறது. சாத்தனுர் உலகப் பேரிலக்கியமாகத் தம்பாயத்தை ஆக்கியத்தோடு கதையிடையிட்ட கருத்துடை இலக்கியக் கருவூலமாக நல்கியமை எண்ணிப் போற்றத்தக்கதாம்!